# முகமூடி இந்தி ! ஒளிந்திருக்கும் முகம் சமஸ்கிருதம் !

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ் மண்ணிற்கு கொஞ்சமும் பொருத்தமில்லாத; தமிழர்களின் பண்பாட்டிற்கு நேரெதிரான கொள்கைகளைக் கொண்ட பா.ஜ.க.வும் அதன் கூலிப்படையினரும் மட்டும், தேசிய கல்விக் கொள்கையின் மும்மொழித் திட்டத்தை ஆதரித்தபடியே, “இந்தி – சமஸ்கிருதம் என்று எங்கே இருக்கிறது? மூன்றாவது மொழியாக, இந்தியாவில் உள்ள எந்த மொழியை வேண்டுமானாலும் படிக்கலாம். அயல் நாட்டு மொழிகளைக் கூடக் கற்கலாம்” என்று ஒரு ‘தினுசாக’ப் பேசுகிறார்கள். அடடா..! இவர்களுக்குத்தான் இந்திய மொழிகள் மீது எவ்வளவு அக்கறை?


கண்ணகி சிலை


கீழடி

மும்மொழித் திட்டம் என்ற பெயரில் என்னென்ன மொழிகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என அட்டவணையைப் பார்த்தால் பெரும்பாலான மாநிலங்களில் இந்தி அல்லது சமஸ்கிருதமே முன்னிலைப்படுத்தப்படுகிறது. தமிழர்கள் வாழும் யூனியன் பிரதேசமான அந்தமான் நிக்கோபர் தீவுகளைத் தவிர வேறெங்கும் தமிழ் மொழி இடம்பெறவில்லை. இதுவும்கூட எத்தனை காலத்திற்கு நீடிக்கும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. பா.ஜ.க. ஆளும் ராஜஸ்தான் மாநிலத்தில் உருது ஆசிரியர்களுக்குப் பதில் சமஸ்கிருத ஆசிரியர்களை நியமிக்கும் மொழிப் பாசிசம் வெட்டவெளிச்சமாகியுள்ளது.


> **த**மிழ்மொழியை இந்தியாலோ சமஸ்கிருதத்தாலோ ஒருபோதும் அழிக்க முடியாது.

தமிழ்நாடு மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால், வடமாநிலங்களைப் போலத் தாய்மொழியை முற்றிலும் புறக்கணித்து சமஸ்கிருதமயமாக்கும் திட்டம் தான் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படும்.

தேசிய கல்விக் கொள்கை 2020ன் 4.17வது பிரிவு, “இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள செம்மொழியான சமஸ்கிருதம், இலக்கியம், கணிதம், அறிவியல், மருத்துவம், தத்துவம், இசை, அரசியல் இன்ன பிற உள்ளிட்ட பல்வேறு கலைச்செல்வங்களைக் கொண்டுள்ளது, இதனால் சமஸ்கிருத மொழி பள்ளிகளிலும், உயர் கல்வியிலும் அனைத்து நிலைகளிலும் மும்மொழித் திட்டத்தில் ஒன்றாக மாணவர்களுக்கு கற்றுத் தரப்படும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிறகே, மூத்த

> **ஒ**ன்றிய பா.ஜ.க. அரசின் தேசிய கல்விக் கொள்கை மூலம் இந்தி-சமஸ்கிருத மொழிகளைத் திணிக்கும் முயற்சி.

மொழியான தமிழ் மற்றும் இந்தியாவின் பிற மொழிகள் பற்றி 4.18வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும், சமஸ்கிருதத்துடன் கூடுதலாக (In addition to Sanskrit). தமிழ் உள்ளிட்ட மொழிகளைக் கற்பதற்கு ஆன்லைன்


ஜகதீப் தன்கர்


முறையில் வாய்ப்பளிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம், சமஸ்கிருதத்தைத் திணிக்கவும், தமிழ் உள்ளிட்ட மற்ற மொழிகளைப் புறங்கையால் ஓரங்கட்டவும் திட்டமிட்டே ஒன்றிய பா.ஜ.க. அரசு தேசியக் கல்விக் கொள்கையையும் அதன் வழியாக மும்மொழித் திட்டத்தையும் நம் மீது திணிக்கிறது என்பது தெளிவாகிறது.

தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் ஆசிரியர் பணியிடங்கள் காலியாகவே உள்ளன. இதுகுறித்து, கழகத்தின் நாடாளுமன்ற மாநிலங்களவைக் குழுத் தலைவரான திருச்சி சிவா அவர்கள், அந்தந்த மாநில மொழிகளைக் கற்பதற்கு கேந்திரிய வித்தியாலயா பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற பட்டியலைக் கோரியதுடன், “தமிழ்நாட்டில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பாக ஒன்றிய கல்வித் துறை அமைச்சகத்திடம் ஏதேனும் விவரம் உள்ளதா?” என்றும் எழுப்பிய கேள்விகளுக்கு, ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் 5.8.2021 அன்று அளித்த பதிலில், கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் மாநில மொழிகளுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்றும், 15 அல்லது

> **தி**ராவிட இயக்கம் ஆதிக்க மொழியின்படையெடுப்பை முறியடித்து, தமிழைப் பாதுகாக்கும் அரணாகத் திகழ்கிறது.

அதற்கு மேற்பட்ட மாணவர்கள் தங்களின் மாநில மொழியைக் கற்க விருப்பம் தெரிவித்தால் மட்டுமே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

இதுதான் பா.ஜ.க அரசின் தமிழ் மீதான அக்கறை. இவர்கள்தான்


வள்ளலார்

இந்தியாவின் பிற மாநிலங்களிலும் தேசியக் கல்விக் கொள்கையின் மும்மொழித் திட்டம் மூலம் தமிழைக் கற்றுத் தரப் போகிறார்களாம். அதனால், தமிழ்நாட்டில் மும்மொழித் திட்டம் என்ற பெயரில் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்க வேண்டுமாம்.

தமிழ்ப் பண்பாட்டை அழிக்க நினைத்து, சமஸ்கிருதம், இந்தி மொழிகள் மூலம் ஆரியப் பண்

> **த**மிழ்ப் பண்பாட்டு மரபின் தொடர்ச்சிதான் திராவிட இயக்கம்.

பாட்டைத் திணிக்க எவர் முயற்சித்தாலும் அதற்கு இந்த மண்ணில் இடம் கிடையாது என்கிற வகையில் அரை நூற்றாண்டுக்கு முன்பே தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையைச் சட்டமாக்கினார் பேறிஞர் பெருந்தகை அண்ணா. அந்த வரலாற்றுப் பக்கத்தைப் புரட்டினால் தான் இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களின் வஞ்சகத்தை இளைய தலைமுறை புரிந்து கொள்ள முடியும்.

(தொடரும்)

அன்புடன்

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 14
26.02.2025.

### தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய கல்வி நிதியைத் தர மறுத்து ஆணவத்துடன் ‘பிளாக்மெயில்’ செய்யும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் கல்வித் துறை இணை அமைச்சர் சுகந்த மஜூம்தார் வருகைக்கு எதிராக கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்!

### இன்று – சென்னை – ஐ.ஐ.டி. வாயிலில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது! மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு அறிவிப்பு!

**சென்னை, பிப். 28 -**

**தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய கல்விக்கான நிதியைத் தர மறுத்து “இந்தி” படித்தால் தான் தருவோம் என்று ஆணவத்துடன் “பிளாக் மெயில்” செய்யும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று ஒன்றிய கல்வித்துறை இணை அமைச்சர் சுகந்த மஜூம்தார் வருகைக்கு எதிராக கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - (தமிழ்நாடு) அறிவித்துள்ளது.**

அக்கூட்டமைப்பின் அறிக்கை வருமாறு:

தேசியக் கல்விக் கொள்கையையும், மும்மொழிக் கொள்கையையும் ஏற்றுக் கொண்டால் தான், தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய கல்விக்கான நிதியைத் தருவோம் என பா.ஜ.க.வின் ஒன்றிய கல்வி அமைச்சர்தர்மேந்திர பிரதான் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராகவும் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமைக்கு எதிராகவும் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராகவும் ஆணவத்தோடு பேசி இருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியை திணிக்க முயலும் சூழ்ச்சிக்கு எதிராக மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (FSOTN) சார்பாக கடந்த 25.02.2025 அன்று தமிழ்நாடு முழுவதும் 68 இடங்களில் மாபெரும் கண்டன போராட்டம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து மாணவர் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் ஆங்காங்கே தன்னெழுச்சியாக இந்தி எழுத்துக்களை அழித்து எழுச்சிமிகு போராட்டங்களைத் தொடங்கி இருக்கின்றனர்.

மாணவர்களின் இத்தகைய போராட்டங்கள் மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெரு மக்கள் இதை திசை திருப்பும் விதமாக தொடர்ச்சியாகப் பேசி வருகிறார்கள். இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “ஒன்றிய அரசின் அலுவலகங்கள் முன்பாக தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு நடத்திய கண்டனப் பேரணி என்பது, சென்னை சௌகார்பேட்டை இந்து தியாலாஜிக்கல் பள்ளியின் முன் 1938 ஆம் ஆண்டு ஆண்களும் பெண்களுமாக நடத்திய ஆர்ப்பாட்டத்தின் இன்றைய பதிப்பு போல இருந்தது” என்று மாணவர் போராட்டத்திற்கு ஊக்கமளித்துள்ளார். மேலும் “ரூ.5000 கோடியல்ல 10,000 கோடி கொடுத்தாலும் நாங்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ள மாட்டோம்! அதில் கையெழுத்துப் போட மாட்டோம்!” என்று தமிழர் உரிமைப் போர்க்களத்தில் எழுச்சியுடன் முழங்கி இருக்கிறார்.

வடஇந்திய மாநிலங்களில் பேசப்பட்டு வந்த 20க்கும் மேற்பட்ட அந்த மக்களின் தாய்மொழிகளைக் கடந்த ஒரு நூற்றாண்டில் இந்தி எனும் ஆதிக்க மொழிப் படையெடுப்பு சிதைத்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்குள் மும்மொழிக் கொள்கை என்ற முகமூடி அணிந்து நுழைய முயற்சிக்கிறது. மேலும் இந்தியின் வழியே சமஸ்கிருதத்தைத் திணித்துத் தமிழர்களின் பண்பாட்டைச் சிதைக்கும் சூழ்ச்சியும் இதில் அடங்கியிருக்கிறது. இதை உணர்ந்துதான் நம் உயிரிலும் உணர்விலும் கலந்துள்ள தாய்த்தமிழ் மொழி காக்கும் போர்க்களத்தில் மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (FSOTN) தொடர் போராட்டங்களைத் தமிழ்நாடு முழுவதிலும் நடத்தி வருகிறது.

இந்நிலையில், நாளை 28.02.2025 (அதாவது இன்று) தமிழ்நாடு வருகை தருவதாக இருந்த ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு எதிராகக் கருப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்த எமது கூட்டமைப்பு உள்பட பல்வேறு அமைப்புகளும் திட்டமிட்டிருந்த நிலையில், தர்மேந்திர பிரதானின் பயணம் ரத்து செய்யப்பட்டிருப்பது தமிழ்நாட்டின் உணர்வெழுச்சிக்கும், மாணவர்களின் போராட்டங்களுக்கும் கிடைத்துள்ள வெற்றியாகும்.

எனினும், அய்.அய்.டியில் நடைபெறும் விழாவில் ஒன்றிய கல்வித் துறை இணை அமைச்சர் சுகந்த மஜூம்தார் கலந்துகொள்வதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. தர்மேந்திர பிரதான் என்ற ஒருவரை மட்டும் கண்டிப்பதல்ல, தமிழ்நாட்டுக்கு நிதி தர மறுத்து, ஹிந்தியையும், தேசியக் கல்விக் கொள்கையையும் திணிக்க முனையும் ஒன்றிய அரசைக் கண்டித்தே இந்தப் போராட்டம் என்பதால், ஒன்றிய கல்வித் துறை இணை அமைச்சர் சுகந்த மஜூம்தாருக்கும் கருப்புக் கொடி காட்டுவது என்று மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தமிழ்நாடு முடிவெடுத்துள்ளது.

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமையில், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், இந்திய மாணவர் சங்கம், சமூகநீதி மாணவர் இயக்கம், தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ், திராவிட மாணவர் கழகம், திராவிட மாணவர் பேரவை, திராவிட முன்னேற்றக் கழக மாணவர் அணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, மக்கள் நீதி மய்யம், மதிமுக மாணவர் அணி, மாணவர் இந்தியா, முற்போக்கு மாணவர் கழகம், முஸ்லிம் மாணவர் பேரவை உள்ளிட்ட அமைப்புகள் இணைந்துள்ள “மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்புதமிழ்நாடு (FSOTN)” சார்பில், சென்னை, ஐ.ஐ.டி. வாயிலில் “மாபெரும் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்” இன்று (28.02.2025) காலை 9.30 மணியளவில் நடைபெற உள்ளது.

எனவே, கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள மாணவர் இயக்கங்களைச் சார்ந்த அனைத்து பொறுப்பாளர்களும் குறிப்பாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து நிர்வாகிகளும் பெருந்திரளான மாணவர்களுடன் பங்கேற்று, ‘உயிரைக் கொடுத்தேனும் தாய்த்தமிழைக் காத்த கொள்கைத் தீரர்களின் வழி வந்தவர்கள் நாம்’ என்பதை பாசிச பா.ஜ.க. அரசிற்கு உணர்த்துவோம்!

இவ்வாறு அக்கூட்டமைப்பு அறிவித்துள்ளது.